ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## நான்காம் வகுப்பு

(முதல் பருவம்)

ஆசிரியர்
**குரும்பை உலகநாதன்**
மற்றும் ஆசிரியர் குழு

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு
**V.ஜெகந்நாதன்**

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்
எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்
48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

© உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்

பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
முதல் பதிப்பு : 2020 (பொதுப் பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# முகவுரை



"செந்தமிழ் வாசகம்" என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த "செந்தமிழ் வாசகம்". தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டும் தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறிகளைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது, குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறன் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு **( CCE METHOD )** நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினைப் பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| வ.எண் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | அன்னைத் தமிழே! | 5 |
| 2. | பனைமரச் சிறப்பு | 8 |
| 3. | ஏழு இறக்கைக் குருவியும், தெனாலிராமனும் | 20 |
| 4. | முளைப்பாரி – பாடல் | 27 |
| 5. | பண்படுத்தும் பழமொழிகள் | 32 |
| 6. | முயல் அரசன் | 40 |
| 7. | வெற்றி வேற்கை | 46 |
| 8 | விடியும் வேளை | 55 |
| 9. | கரிகாலன் கட்டிய கல்லணை | 63 |
| | அகரமுதலி | 71 |




# 1 அன்னைத் தமிழே!



அன்னைத் தமிழே - என்
ஆவி கலந்தவளே!
என்னை வளர்ப்பவளே!
என்னில் வளர்பவளே!
உன்னைப் புகழ்வதற்கே
உலகில் பிறப்பெடுத்தேன்
சொல்லில் விளையாடச்
சொல்லித் தந்தவளே!
சொல்லில் உனது புகழ்
சொல்ல முடியலையே!

- நா.காமராசன்

## பாடல் பொருள்

என் அன்னையாகிய தமிழே! என் உயிரில் கலந்தவளே! என்னை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், என் உடன் சேர்ந்து வளர்பவளே! உன்னைப் புகழ்வதற்காகவே இவ்வுலகில் பிறந்துள்ளேன். சொல்லைக் கொண்டு விளையாடுவதற்குச் சொல்லிக் கொடுத்தவளே! அதே சொல்லினால் உனது புகழை என்னால் கூற முடியவில்லையே!

ஓசை நயமும் கருத்தும் மிக்க பாடல்களைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்

## உரையாடலாம் வாங்க!



பாடலை ஓசை நயத்துடன் பாடுக.

பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்து மகிழ்க.

மொழியின் சிறப்பினைக் கூறும் வேறு பாடலை அறிந்து வந்து பாடுக.



## கலந்துரையாடுவோம்!

பள்ளிக்கு வருவதற்கு முன்பே உனக்கு பேசத் தெரியுமா? கற்றுத் தந்தது யார் யார்? எப்படி? யோசி!

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. அன்னை + தமிழே - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______

   (அ) அன்னந்தமிழே (ஆ) அன்னைத்தமிழே
   (இ) அன்னத்தமிழே (ஈ) அன்னைதமிழே

2. பிறப்பெடுத்தேன் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______________

   (அ) பிறப் + பெடுத்தேன் (ஆ) பிறப்பு + எடுத்தேன்
   (இ) பிறப் + எடுத்தேன் (ஈ) பிறப்ப + எடுத்தேன்

3. மறந்துன்னை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

   (அ) மறந்து + துன்னை (ஆ) மறந் + துன்னை
   (இ) மறந்து + உன்னை (ஈ) மறந் + உன்னை

4. சிறப்படைந்தேன் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   (அ) சிறப்பு + அடைந்தேன் (ஆ) சிறப் + அடைந்தேன்
   (இ) சிற + படைந்தேன் (ஈ) சிறப்ப + அடைந்தேன்

## வினாக்களுக்கு விடையளி

1. சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் யார்?
2. எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
3. இப்பாடலின் ஆசிரியர் அன்னைத் தமிழை எவ்விதம் புகழ்கிறார்?

1. இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே எழுத்தில் தொடங்கும் சொற்களை எடுத்து எழுதுக.

என்னை,

2. இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.

கலந்தவளே,

## பாடலை நிறைவு செய்வோம்



இயற்கை தீட்டிய ஓவியமே
___________ வண்ணங்களாலான காவியமே
வானவில்லே வண்ண ___________________
கரு மேகம் பொழியும்
பெரு _______________________ பின் வருவாய்
என்னோடு விளையாட
நித்தம் நித்தம் நீ _______________ வேண்டும்.

## செயல் திட்டம்

மொழியின் சிறப்பினைக் கூறும் இரண்டு பாடல்களை எழுதி வந்து படித்து / பாடிக் காட்டுக.

# 2 பனைமரச் சிறப்பு

மாலை பள்ளி மணி ஒலித்தது. மாணவர்கள் அவரவர் வீடு நோக்கிச் சென்றனர். அன்புமணியும் செல்வமதியும் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டே வீடு திரும்பினர். அப்பொழுது சாலையோரத்தில் கருப்பு நிறத்தில் பந்து போன்று விழுந்து கிடந்த ஒரு பொருளைக் கண்டனர். அதனை எடுத்து மேலும் கீழும் புரட்டிப் பார்த்தனர். அதிலிருந்து கம கம என்று வந்த மணம் அவர்கள் மனதைக் கவர்ந்தது. அந்த கருநிற பந்து பற்றி அறிந்து கொள்ளும் ஆவலைத் தூண்டியது. அவ்வழியே சென்ற பெரியவரிடம் அது பற்றிக் கேட்டனர்.



அன்புமணி : தாத்தா கருப்பு நிறத்தில் பந்து போலிருக்கின்றது. இது என்ன பழம்? தாத்தா,

தாத்தா : ஓ! இதுவா! இதுதான் பனம்பழம்.

செல்வமதி : இந்தப் பழத்தைச் சாப்பிடலாமா?

தாத்தா : ம்.. நன்றாகச் சாப்பிடலாம். பனம்பழம் சிறந்த சத்துணவாகும். உயிர்ச்சத்து நிறைந்தது. இதனை நெருப்பில் சுட்டுச் சாப்பிடலாம்.

அன்புமணி : தாத்தா! இந்தப் பனம்பழத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள ஆவலாக உள்ளது. அது பற்றி கூறுங்கள்.

தாத்தா : பனம்பழம் பனைமரத்தில் பூத்துக்காய்த்துப் பழுக்கும். பனை, புல்லினத்தைச் சேர்ந்த ஒரு தாவரப்பேரினம். இது வேர், தூர்ப்பகுதி, நடுமரம், பத்தைமட்டை, உச்சிப்பகுதி, ஓலை,சில்லாட்டை, பாளைப்பீலி, பனங்காய் பச்சை மட்டை, சாலை ஓலை, குருத்தோலை என்று பன்னிரண்டு உறுப்புகளை உடையது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனைத் தரக்கூடியது. நமது முன்னோர்கள் பனை மரத்தை கேட்டதை கொடுக்கும் தேவலோகத்து மரம் எனக் கூறப்படும் கற்பகத்தருவுக்கு ஒப்பிடுவர்.

செல்வமதி : ஆகா! பனைமரம் இத்தனை சிறப்புகள் கொண்டதா? நான் நுங்கு மட்டும் சாப்பிட்டுள்ளேன். பனைமரத்தால் நாமடையும் பயன்கள் வேறு என்னென்ன என்று சொல்லுங்கள் தாத்தா?

தாத்தா : பனம்பழம் சிறந்த சத்துணவாகும். நுங்கும், பனங்கிழங்கும் உணவாகப் பயன்படுகிறது. பனஞ்சாறு பதநீராகவும், பதநீரிலிருந்து எடுக்கப்படும் கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவை நோய்தீர்க்கும் குணங்கள் கொண்டவையாகவும் பயன் தருகிறது. பனை ஓலைகள் கூடைமுடையவும் கைவினைப் பொருள்கள் செய்யவும், கூரை வேயவும் பயன்படுகின்றன.

அன்புமணி : பனை இவ்வளவு பயன்களை தருகிறதா?

தாத்தா : ஆமாம், அன்புமணி! அது மட்டுமல்ல, நம் செந்தமிழ் எழுத்துகள் முதன்முதலில் எழுதப்பட்டது பனை ஓலையில் தான். நமது முன்னோர்கள் பற்றியும், பண்டைய இலக்கியங்கள் பற்றியும் தெரிந்து கொள்ள பெரிதும் உதவியது பனைஓலைச்சுவடிகள் தான்


பனை மரம்


நுங்கு


பதநீர்


பனம்பழம்


கருப்பட்டி


கற்கண்டு


முறம்


விசிறி


தொப்பி


பனங்கிழங்கு


ஓலைச்சுவடி


கூடை

செல்வமதி : அப்படியா?

தாத்தா : பனைமரங்களின் வேர் நீரை தக்க வைத்துக்கொள்ளும் இயல்புடையது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரக் காரணமாக அமைகிறது.

அன்புமணி : அடேயப்பா....! இவ்வளவு சிறப்புகளைக் கொண்டதா? இம் மரம்.

தாத்தா : நீங்கள் நுங்கு தின்ற பின் வெட்டிய பனங்காய்களைக் கொண்டு வண்டி செய்து ஓட்டுவது, பனைஓலை விசிறி, பொம்மைகள், குழந்தைகள் விளையாட கிளுகிளுப்பை செய்து போன்றவற்றை பயன்படுத்துகிறோம்.

செல்வமதி : இத்தனை பலனளிக்கக்கூடிய மரங்களை அதிகமாக காணமுடியவில்லையே. அது ஏன்?.

தாத்தா : சரியாகக் கேட்டாயம்மா. நமது முன்னோர்கள் பனை மரத்தை கற்பகவிருட்சம் என்று பெயரிட்டு அழைத்தார்கள். உணவு நிலையில் மட்டுமின்றி உணர்வு

நிலையிலும் கூட நம் முன்னோர்கள் பனைமரத்துடன் இணைந்துள்ளனர்.

தமிழர் இனத்தின் தேசிய மரம் பனையாகும். தமிழக இயற்கை வளத்தின் சாட்சியாக விளங்கும் பனை மரங்கள் எரிபொருளுக்காக வெட்டப்படுகின்றன. பனங்காடை, பனைஉழவரான் போன்ற பறவைகள் தம் வாழிடங்களை இழந்து வருகின்றன. மரங்கள் இன்றி மனிதர்கள் இல்லை என்பது இன்றைய மக்களுக்குப் புரியவில்லை. ஆனால் நமது முன்னோர்கள் தெளிவாகப் புரிந்து, மரம் வளர்த்தார்கள். இதனை உணர்ந்து நாம் அனைவரும் பனைமரம் வெட்டுவதைத் தடுக்க வேண்டும். பனைவிதைகளை நிலத்தில் ஊன்றி அதன் வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

அன்புமணி : மிக்க நன்றி தாத்தா! பனைமரத்தினைப் பற்றிய பல அரிய செய்திகளைத் தங்கள் மூலம் அறிந்து கொண்டோம்.

தாத்தா : நீங்கள் அறிந்து கொண்டதை உங்கள் நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் எடுத்துக் கூற வேண்டும்.

இருவரும் : கட்டாயமாக எல்லோரிடமும் கூறுவோம் தாத்தா.

தாத்தா : மிக்க மகிழ்ச்சி! இப்பயன்மிகு பனைமரம் நம் தமிழ் நாட்டின் மாநில மரமாகும். இதன் சிறப்பினை உணர்ந்து, விதைத்துக் கொண்டே இரு: முளைத்தால் மரம் இல்லையேல் உரம் என்பதற்கு ஏற்ப பனங்கொட்டை களைச் சேகரித்து குளம், ஆறு, குட்டை போன்றவற்றின் கரையோரங்களில் ஊன்றிப் பாதுகாக்க வேண்டும்.

இருவரும் : அப்படியே செய்வோம்.

தாத்தா : மகிழ்ச்சி குழந்தைகளே!

சென்று வாருங்கள்.

தேசிய மாநில அளவிலான சமூக, உணர்வுபூர்வமான செய்திகளை இனங்கண்டு அவற்றின் மீது கருத்தாடல் செய்தல்.

## தமிழக அரசு சின்னங்கள்

### அறிந்து கொள்வோம்

சின்னம்




திருவில்லிபுத்தூர் கோவில் கோபுரம்

பறவை



மரகதப்புறா

பாடல்

**நீராரும் கடலுடுத்த**

தமிழ்த்தாய் வாழ்த்து

மலர்



செங்காந்தள்

நடனம்



பரத நாட்டியம்

மரம்



பனை

விலங்கு



வரையாடு

விளையாட்டு



கபடி

பழம்



பலா

பூச்சி



பட்டாம்பூச்சி

## உரையாடலாம் வாங்க!



கருப்பட்டி தயாரிக்கும் விதம், நன்மை, தீமை பற்றி கலந்துரையாடுக.

## சிந்திக்கலாமா?



கிளி வளர்த்தேன், பறந்து போனது,
அணில் வளர்த்தேன், ஓடிப் போனது
மரம் வளர்த்தேன் ...
இரண்டும் திரும்பி வந்தது ...

- டாக்டர். அப்துல்கலாம்

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பண்டைய என்ற சொல்லின் பொருள் ______________

(அ) வலிமையான (ஆ) எளிய
(இ) புதிய (ஈ) பழமையான

2. அரிய என்ற சொல்லின் எதிர்ச் சொல் ______________

(அ) எளிய (ஆ) பழைய
(இ) நிறைய (ஈ) அதிகம்

3. இணைந்து என்ற சொல்லின் எதிர்ச் சொல் ______________

(அ) நடந்து (ஆ) பிரிந்து
(இ) எழுந்து (ஈ) பறந்து

4. குருத்தோலை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

(அ) குரு + தோலை (ஆ) குரு + ஓலை
(இ) குருத்தோ + ஓலை (ஈ) குருத்து + ஓலை

5. ‘தரு’ என்ற சொல்லின் பொருள் ______________

(அ) நாய் (ஆ) கிளி
(இ) மரம் (ஈ) ஓலை

6. பனை________________ வகை தாவரம் ஆகும்.

(அ) புல் (ஆ) நீர்வாழ் தாவரம் (இ) ஓலை (ஈ) தென்னை

7. வாழிடம் - பொருள் கூறுக. ________________

(அ) வாழும் இடம் (ஆ) குளம் (இ) கிணறு (ஈ) ஆகாயம்

8. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

(அ) சாலையோரம் = ____________________ + ____________________

(ஆ) கற்பகத்தரு = ____________________ + ____________________

## வினாக்களுக்கு விடையளி

1. பனைமரத்தில் இருந்து கிடைக்கும் உணவுப்பொருள்கள் யாவை?
2. சிறுவர்கள் விளையாடுவதற்குப் பனைமரம் எவ்வாறு உதவுகிறது?
3. பனைமரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?
4. பனைமரத்தின் பயன்களாக நீ கருதுவனவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.
5. பனைமரத்தை 'கற்பகத்தரு' என்று ஏன் கூறுகின்றனர்?

**உங்கள் வகுப்பறையில் மற்றும் வீட்டில் பயன்படுத்தப்படும் மரத்தலான பொருள்களைப் பட்டியலிடுக.**



## இணைந்து செய்வோம்

சொற்களுக்கு உரிய படங்களைப் பொருத்துக.

1. தீ
2. மா
3. கோ
4. வீ
5. பா
6. ஆ
















## தமிழோடு விளையாடலாம்

**ஒரே பொருள் தரும் சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அறிவு | - | கதிரவன் | சந்திரன் | மதி | ஞானம் | பரிதி | விவேகம் |
| 2. | அழகு | - | வடிவு | அன்னை | வனப்பு | தாய் | பொலிவு | எழில் |
| 3. | அம்பு | - | கணை | மணிமுடி | பானம் | கீரிடம் | அஸ்திரம் | அரசி |
| 4. | திரள் | - | கூட்டம் | கடைவீதி | நெருக்கம் | மக்கள் | கும்பல் | நெரிசல் |

## செயல் திட்டம்

**நோக்கம்**

நமது மாவட்டத்தில், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவர்களும், ஆசிரியர்களும், உள்ளூர் இளைஞர்களுடன் இணைந்து பள்ளி வளாகத்தினையும், கிராமப்பகுதியையும் பசுமையாக மாற்ற மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பது என முடிவு செய்தனர்.

**திட்டமிடுதல்**

மழை பெய்த அடுத்த நாளில் மரக்கன்றுகள் நடுவது என முடிவு செய்யப்பட்டது. அதற்குள் தேவையான மரக்கன்றுகளைத் தன்னார்வலர்களிடம் இருந்தும், அரசு வனத்துறையிலிருந்தும் பெறுவது என்றும், பராமரிக்கத் தேவையான கூண்டுகளைத் தயார் செய்து வைத்துக் கொள்வது எனவும் கூட்டத்தில் பேசித் திட்டமிட்டது.

**செயல்படுத்துதல்**

மழைபெய்த மறுநாள் பள்ளி வளாகத்தில் போதுமான குழிகள் தோண்டப்பட்டு எருவிட்டு பலன் தரும் வேம்பு, புங்கை போன்ற மரக்கன்றுகள் நடப்பட்டு கூண்டுகள் வைக்கப்பட்டன. சாலை ஓரங்களிலும், குளம், குட்டைகளின் கரையோரங்களிலும் பனைவிதைகள் ஊன்றப்பட்டன. மேலும் தன்னார்வலர் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அவற்றை நட்டு வளர்ப்பவர்களுக்குப் பரிசுகளும் அறிவிக்கப்பட்டன.

## மதிப்பீடு

திட்டமிட்டபடி செயல் நிறைவு பெற்றது மனத்திற்கு மகிழ்ச்சியை அளித்தது. இச்செயல்பாடுகளினால் விரைவில் பசுமைச்சூழல் ஏற்படும். மேலும் அடுத்த ஆண்டு முன்கூட்டியே திட்டமிட்டு இன்னும் அதிக மரக்கன்றுகளை நட்டு வளர்க்க முடிவு செய்யப்பட்டது. இது போன்று மரக்கன்றுகளை நீங்களும் நட்டு வளர்க்கலாமே!

## கலையும், கை வண்ணமும்

### செய்முறை

**தேவையான பொருட்கள் :**

**பனைஓலைகள், தேவையான எண்ணிக்கையில்**

பனைஓலைகளில் நடுவில் உள்ள தண்டை நீக்கி விட்டுப் பட்டைகளாக ஓலைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். பத்து ஓலைகளை அருகருகே வரிசையாக வைக்க வேண்டும். வேறு ஓர் ஓலையை எடுத்து வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ள ஓலைகளின் மேலும் கீழுமாகச் செருக வேண்டும். இப்படியே அடுத்தடுத்த ஓலைகளை இணைத்துப் பின்ன வேண்டும். ஓரங்களை மடித்துச் செருகிவிட வேண்டும். இப்பொழுது அழகிய பனைஓலைப்பாய் தயார்.

( அல்லது )

பனைஓலைப்பெட்டி அல்லது ஓலைச்சுவடி தயாரித்து அவற்றில் திருக்குறளை எழுதலாம்.



## செயல் திட்டம்

பனைஓலைகளைப் பயன்படுத்திக் காற்றாடி, விசிறி, பொம்மைகள், பெட்டிகள் போன்ற பொருள்களைச் செய்து வருக.

## இலக்கணம் - பால்

திணையின் உட்பிரிவே பால் ஆகும். பால் என்ற சொல்லிற்குப் பகுப்பு என்பது பொருள். பால் ஐந்து வகைப்படும். இலக்கண நூல்கள் உயர்திணையை மூன்று பாலாகவும், அஃறிணையை இரண்டாகவும் பிரித்துக் காட்டியுள்ளன.

### உயர்திணை

01



ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால் எனப்படும்.
அவன் என்ற பெயரில் சுட்டப்படும்
எ.கா. அவன் வந்தான்.

02



ஓர் பெண்ணைக் குறிப்பது பெண்பால் எனப்படும்.
அவள் என்ற பெயரில் சுட்டப்படும்.
எ.கா. அவள் சென்றாள்.

03

ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் மனிதர்களைக் குறிப்பது பலர்பால் எனப்படும்.
அவர்கள் என்ற பெயரில் சுட்டப்படும்.
எ.கா. அவர்கள் சென்றார்கள்.



### அஃறிணை



04



அஃறிணையில் ஏதேனும் ஒன்றை மட்டும் குறிப்பது ஒன்றன்பால் ஆகும்.
அது என்ற பெயரில் சுட்டப்படும்.
எ.கா. அது வந்தது.

05

அஃறிணையில் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் எவை இருந்தாலும் அவை பலவின் பால் ஆகும்.
அவை என்ற பெயரில் சுட்டப்படும்.
எ.கா. அவை வந்தன.



## கீழ்க்காணும் சொற்களை வகைப்படுத்துக.

அவள், சென்றனர், படித்தான், வந்தது, பறந்தன, ஓடினர், எழுதினான், விளையாடினர், குயவன், நாட்டிய மங்கை, மேய்ந்தன, வகுப்பறை, கற்கள், ஆசிரியர், மாணவர்கள், வீடு, பெற்றோர், தங்கை, அண்ணன், மரங்கள், செடி, மலர், பூக்கள்

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| | | | | |

## பொருத்துக























1. ----------------------------------
2. ----------------------------------
3. ----------------------------------
4. ----------------------------------
5. ----------------------------------

# 3 ஏழு இறக்கைக் குருவியும், தெனாலிராமனும்



விசயநகரம் மிகவும் புகழ்பெற்ற நகரங்களில் ஒன்றாகும். அதை கிருட்டிணதேவராயர் என்ற புகழ்பெற்ற மாமன்னர் ஆண்டு வந்தார். அவருடைய சபையில் தெனாலிராமன் பிரபலமான அரசவைப் புலவராக அங்கம் வகித்து வந்தார். அவரது பேச்சில் நுண்அறிவும் இருக்கும்; செயல்திறனும் இருக்கும்; வேடிக்கை மிகுந்திருக்கும்; அறிவுரைகளும் புதைந்திருக்கும். எனவே அவர் 'விகடகவி' என்று அழைக்கப்பட்டார்.

அன்றொரு நாள், விசயநகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. அதில் அரச உற்சவம் நடைபெற இருந்தது. உற்சவத்தைக் காண அண்டை நாட்டு அரசர் விசயவர்த்தனர் வந்திருந்தார். விழா முடிந்தபின்பும் அரச விருந்தினராக விசயநகரில் சில நாட்கள் தங்கியிருந்தார்.

விசயவர்த்தனர் ஒரு நாள் மன்னர் கிருட்டிணதேவராயரிடம், ''அரசே நான் கேள்விப்பட்டேனே...? தங்கள் அவைப் புலவர் தெனாலிராமன் மிகவும் நுண்அறிவாளியாமே! அவரிடம் சொல்லி, எனக்குக் காலையில் தங்கமஞ்சள் நிறத்திலும், நடுப்பகலில் சிவப்பு நிறத்திலும், இரவில் ஏழு வர்ணங்களிலுமாக உருமாறும் அற்புதக்குருவி ஒன்றைக் கொண்டு வந்து தரச் சொல்லுங்களேன்...'' என்றார்.

''மேலும் அது சில சமயம் மூன்று காலாலும், சில சமயம் இரட்டைக் காலாலும், பிறகு ஏழு இறக்கை கொண்டு வானில் பறக்கவும் வேண்டும்'' என்றார். அரசர் உடனே தெனாலிராமனை அழைத்து, ''விரைவில் அத்தகைய குருவியைக் கொண்டு வா...'' என்று உத்தரவு இட்டார். அதைக் கேட்டுத் தெனாலிராமனுக்குத் தலை சுற்றியது. அத்தகைய பறவை பற்றி அவர் ஒரு போதும் கேள்விப்பட்டது கூட இல்லை. ஆனால், சிரித்தவாறே, ''சரி... அரசே ! நாளைக்கு நான் அத்தகைய பறவையோடு வருகிறேன்'' என்றார். மறுநாள் தெனாலிராமன், சபைக்குத் தாமதமாக வந்தார். அவர் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. அவரது உடைகள் கிழிந்திருந்தன. அதில் புற்களும், முட்களும், மண்ணும் ஒட்டியிருந்தன. கையில் குருவி எதுவும் இல்லாத ஒரு பறவைக் கூண்டு.

அவர் அரசரிடம், ''என்ன சொல்வேன் அரசே ! அதிசயமான கதை ஒன்று நடந்து விட்டது. அந்தக் குருவி கையில் கிடைத்து விட்டது. நானும் அதைக் கூண்டில் அடைத்தேன். அதை இங்கு எடுத்து வரும் போது, அது தனது மாயமான ஏழு இறக்கைகளை விரித்துப் பறந்து சென்று விட்டது. காட்டில் அதைத் துரத்திக் கொண்டு வெகுதூரம் சென்று விட்டேன். அது மீண்டும் என் கையில் சிக்கவே இல்லை என்றார்.



தொடர்ந்து சற்று தூரத்தில் பறந்து சென்றவாறே, அந்தக்குருவி, என்னிடம் சொல்லிற்று, அரசரிடம் போய்ச் சொல்...காலையாகிற போதோ அல்லது இரவாகிற போதோ, வெளிச்சமோ, இருட்டோ இல்லாத போது, நானே எனது ஏழு இறக்கைகளால் பறந்து, திரும்ப வந்து விடுகிறேன்...என்றது என்றார்.அதைக் கேட்டதும் அரசர் கிருட்டிணதேவராயருக்கு மட்டுமல்ல, அண்டை நாட்டு மன்னர் விசயவர்த்தனருக்கும் தலை சுற்றியது.

அப்படிப்பட்ட சமயம் எப்போது உண்டாகும்? ''காலை ஆகாமல், நடுப்பகல் ஆகாமல், இரவு ஆகாமல் வெளிச்சம், இருட்டு ஆகும் சமயம் எது?'' என்று அனைவரும் வியப்படைந்தனர்.

அதைக் கேட்டு அரசர்கள் இருவரும் சிரித்து விட்டனர்.

விசயவர்த்தனர் சொன்னார், ''தெனாலிராமனின் சாதுரியம் பற்றி இதற்கு முன்பு கேள்விப்பட்டுள்ளேனே தவிர, இப்போதுதான் நேரில் பார்க்கிறேன். உங்கள் அரசவைப் புலவர் உண்மையிலேயே மிகுந்த நுண்அறிவாளிதான்..'' என்று புகழ்ந்தார்.

இதைக்கேட்ட மன்னர் கிருட்டிணதேவராயர் மகிழ்ச்சியடைந்து, தெனாலி ராமனுக்குப் பொன்னும் பொருளும் அளித்துப் பாராட்டினார்.

## பயிற்சிகள்

### அ. பொருள் எழுதுக.

1. உற்சவம் - ------------------------------------
2. வியப்பு - ------------------------------------
3. அண்டை - ------------------------------------
4. சாதுர்யம் - ------------------------------------

### ஆ. பிரித்து எழுதுக.

1. விழாக்கோலம் = ----------------------------------------
2. அரசவைப்புலவர் = ----------------------------------------
3. ஒட்டியிருந்தன = ----------------------------------------

### இ. சேர்த்து எழுதுக.

1. உத்தரவு + இட்டார் = ----------------------------------------
2. பறவை + கூண்டு = ----------------------------------------
3. வியப்பு + அடைந்தனர் = ----------------------------------------

ஈ. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.

1. விசயநகரை ____________________ என்ற மாமன்னர் ஆண்டு வந்தார்.
2. உற்சவத்தைக் காண அண்டை நாட்டு அரசர் ____________________ வந்திருந்தார்.
3. "காலையில் ______________ நிறத்திலும் நடுப்பகலில் _________________ நிறத்திலும், இரவில் _________________ உருமாறும் அற்புதக்குருவி ஒன்றைக் கொண்டு வந்து தரச் சொல்லுங்களேன்." என்றார் விசயவர்த்தனர்.
4. காலை ஆகாமல், ____________________ இரவு ஆகாமல் வெளிச்சம், ____________________ ஆகும் சமயம் எது?

உ. விடை எழுது.

1. விசயநகரத்தை ஆட்சி செய்த புகழ்பெற்ற அரசர் யார்?
2. விசயவர்த்தனர் எப்படிப்பட்ட குருவி வேண்டும் என்று கூறினார்?
3. மன்னர் மகிழ்ச்சி அடையக் காரணம் என்ன?

ஊ. பெயர்ச்சொல்லின் இறுதியில் 'கள்' - சேர்த்துப் பன்மையாக்குக.

(எ.கா) குரங்கு மரத்திற்கு மரம் தாவும்.

குரங்குகள் கூட்டம் கூட்டமாய் வாழும்.

1. உருவத்தில் பெரியது யானை.

    ____________________ கூட்டம் கூட்டமாய் வாழும்.

2. வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்.

    காட்டில் பலவகை____________________ காணப்படும்.

எ. புதிர்களுக்கான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

( சோளம், நிலா, வாழை, அன்னாசிப்பழம், பனிக்கட்டி )

1. மட்டை உண்டு, கட்டை இல்லை. பூ உண்டு. மணமில்லை. அது என்ன?
2. பார்த்தால் கல். பல் பட்டால் நீர். அது என்ன?
3. அழகான பெண்ணுக்கு அதிசய வியாதி. பாதிநாள் குறைவாள். பாதிநாள் வளர்வாள். அவள் யார்?
4. தலையில் கீரிடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?
5. வெளியே உள்ளதை எறிந்து உள்ளே உள்ளதை சுவைத்தான். பின் வெளியே உள்ளதை சாப்பிட்டுவிட்டு உள்ளே உள்ளதை எறிந்தான். அது என்ன?

## ஏ. படத்தைப் பார்த்துப் புதிர் அமை.



(எ.கா)
வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி. அவள் யார்?



---------------------------------------------------

---------------------------------------------------

---------------------------------------------------



---------------------------------------------------

---------------------------------------------------

---------------------------------------------------

### உரையாடலாம் வாங்க!



உன்னிடம் யாராவது
இது போன்ற குருவி கேட்டால் என்ன செய்திருப்பாய்?
யோசித்து கூறுங்கள்.



## குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடி! மணிமகுடம் சூட்டிக்கொள்!



மணக்கும் எழுத்து.
அரசரும், அமைச்சர்களும் கூடும் இடம்.
நிலவும், விண்மீன்களும் வானில் தெரியும் நேரம்.
நவரசங்களில் ஆச்சரியத்தைக் குறிக்கும்.
சிக்கலைத் தீர்க்க உதவும் குணம்.

## சொல்லின் இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்துப் புதிய சொல்லை உருவாக்குக.

| | |
|---|---|
| 1. கதை - (எ.கா) கவிதை | 6. குடை - ------------------ |
| 2. தடு - ------------------ | 7. தடை - ------------------ |
| 3. பல் - ------------------ | 8. வடு - ------------------ |
| 4. சடை - ------------------ | 9. கலை - ------------------ |
| 5. எடு - ------------------ | 10. காசி - ------------------ |

## மீண்டும் மீண்டும் சொல்வோம்

- நம்ம தோசை நல்ல தோசை தச்சன் தோசை தீஞ்ச தோசை
- கோடு போட்ட வீடு. கோலம் போட்ட வீடு, கோலம் போட்ட வீடு
  கோபி அண்ணா வீடு
- குரங்கு வாலும், வாழைப்பழத்தோலும் புலியின் வாலும்
  சின்னப்பையன் வேலும்.
- வெள்ளம் பாயுது. கயலும் துள்ளுது. உள்ளக் கவலை
  எள்ளிப் போகுது.
- கூவுற கோழி கொக்கர கோழி
  கொக்கர கோழி கொழு கொழு கோழி
  கொழு கொழு கோழி கொத்துற கோழி



## கலையும், கைவண்ணமும்

இக்கதையில் வருகின்ற ஏழு இறக்கைக் குருவியை உம் கற்பனைக்கேற்ப வண்ணம் தீட்டி மகிழ்க.



## தெரிந்து கொள்வோம்

தெனாலிராமன் அரசர் கிருஷ்ணதேவராயரின் அவையை அலங்கரித்த விகடகவி ஆவார். விகடகவி என்றால் நகைச்சுவையாகப் பேசுவது, தெனாலிராமன் சிரிக்க வைத்து சிந்தனையைத் தூண்டும் வகையில் பேசுவார்.

## செயல் திட்டம்

1. உங்கள் பள்ளியிலுள்ள நூலகத்தில் இருந்து தெனாலிராமன் கதைகள், பீர்பால் கதைகள், மரியாதை ராமன் கதைகள், அப்பாஜி கதைகள் முதலிய புத்தகங்களைத் தேடிப் படித்து ஒவ்வொரு நூலிலும் உனக்குப் பிடித்த ஒரு கதையை எழுதி வருக.

2. நூலகத்தைப் பயன்படுத்தி எவையேனும் ஐந்து கதைகளின் பெயர்களையும், அந்தக் கதைகளின் ஆசிரியர் பெயர்களையும் பட்டியலிடுக.

| வ.எண். | கதையின் பெயர் | ஆசிரியர் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

# 4 முளைப்பாரி - பாடல்



தன்னா னன்னே னானே தன
தானே னன்னே னானே
ஒண்ணாந்தான் நாளையிலே
ஒசந்த செவ்வா கிழமையிலே
ஓலைக்கொட்டான் இரண்டெடுத்து
ஓடும் பிள்ளை தொண்டலிட்டு - தன்னா
வாங்கியாந்த முத்துகளை
வாளியிலே ஊற வச்சி
கம்மந்தட்டை இரண்டெடுத்து
கணுக்கணுவா முறிச்சி வச்சி
சோளத்தட்டை இரண்டெடுத்து
சுளை சுளையா முறிச்சி வச்சி
மாட்டாந்தொழு தெறந்து
மாட்டெருவு அள்ளி வந்து - தன்னா
ஆட்டாந்தொழு தெறந்து
ஆட்டெருவு அள்ளி வந்து
கடுகுலயுஞ் சிறுபயிறு
காராமணிப் பயிறு
மிளகுளயுஞ் சிறுபயிறு
முத்தான மணிப்பயிறு
மொள போட்ட ஒண்ணா நாளு
ஒரெலையாம் முளைப்பாரி
ஒரெலைக்குங் காப்புக்கட்டி
ஒரு பானை பொங்கலிட்டு
முளைப்பாரி போடுங்கம்மா .............. (2)
தன்னா னன்னே போடுங்கம்மா ........ (2)
தையலரே ஒரு குலவை - தன்னா

- நாட்டுப்புறப்பாடல்

**பாடல்களைச் சொந்த நடையில் தாம் விரும்பும் வகையில் கருத்துக்களை இணைத்துப் பாடுதல்.**

## உரையாடலாம் வாங்க!



- பாடலை ஓசை நயத்துடன் பாடிக்காட்டுக.
- முளைப்பாரி பற்றி அறிந்து வந்து வகுப்பறையில் பேசுக.
- இது போன்று வேறு பாடல்களைக் கேட்டறிந்து வந்து வகுப்பறையில் பாடி மகிழ்க.

## *சிந்திக்கலாமா?*



மாட்டு எருவையும், ஆட்டு எருவையும் வயலுக்கு இட வேண்டும் என்று தாத்தா கூறுகிறார் ஆனால் அப்பாவோ, உடனே பலன் தருவது செயற்கை உரம் தான் என்கிறார்.

யார் கூறுவது சரி?

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### பொருள் தருக.

1. முளைப்பாரி = ---------------------------
2. தையலர் = ---------------------------
3. ஓலைக்கொட்டான் = ---------------------------
4. மாட்டாந்தொழு = ---------------------------
5. ஆட்டாந்தொழு = ---------------------------



### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. இரண்டெடுத்து இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ----------------
   (அ) இரண் + டெடுத்து  (ஆ) இரண்டு + எடுத்து
   (இ) இரண்டே + டுத்து  (ஈ) இரண்டெ + டுத்து

2. பொங்கலிட்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------------------
   (அ) பொங்கல் + இட்டு  (ஆ) பொங்கல் + லிட்டு
   (இ) பொங்க + இட்டு  (ஈ) பொங் + கலிட்டு

3. மணி + பயறு என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   (அ) மணிபயறு  (ஆ) மணபயறு
   (இ) மணப்பயறு  (ஈ) மணிப்பயறு

4. செவ்வாய் + கிழமை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் --------
   (அ) செவ்வாய்கிழமை  (ஆ) செவ்வாய்க்கிழமை
   (இ) செவ்வாகிழமை  (ஈ) செவ்வாயக்கிழமை

### கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) சோளத்தட்டு = -------------------- + --------------------

ஆ) மாட்டெரு = -------------------- + --------------------

### இப்பாடலில் ஒரே சொல் இரண்டு முறை அடுத்தடுத்து வருவதைக் கண்டறிந்து எழுதுக - அடுக்குத் தொடர்

எ.கா. கணுக்கணுவா

-------------- -------------- -------------- --------------

### இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.

எ.கா. நாளையிலே, கிழமையிலே

----------------------- -----------------------

----------------------- -----------------------

இப்பாடலில் இடம்பெற்றுள்ள முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

எ.கா. ஓலைக்கொட்டான் ஓடும்பிள்ளை

---------------------------------- ----------------------------------

---------------------------------- ----------------------------------

மேகத்திலுள்ள பேச்சு வழக்குச் சொற்களைக் குடையிலுள்ள எழுத்து வழக்குச் சொற்களுடன் இணைத்துக் காட்டுக.







1. ----------------------------- 4. -----------------------------

2. ----------------------------- 5. -----------------------------

3. ----------------------------- 6. -----------------------------

## கலையும், கைவண்ணமும்

முளைப்பாரியை வரைந்து வண்ணமிட்டு மகிழ்க.

## தெரிந்து கொள்வோம்

நவதானியங்கள் எவை என அறிந்து கொள்வோமா ....

- நெல்
- கோதுமை
- பாசிப்பயறு
- துவரை
- மொச்சை
- எள்
- கொள்ளு
- உளுந்து
- கடலை

## செயல் திட்டம்

1. மாணவர்கள் ஐந்து பேர் கொண்ட குழுவாகப் பிரிந்து கொள்க. ஒவ்வொரு குழுவும் தமக்குக் கிடைக்கும் சிறு தானியங்களை கொண்டு முளைப்பாரியிட்டுக் கொண்டு வருக.

பேச்சுவழக்குச் சொற்களுக்கு இணையான எழுத்துவழக்குச் சொற்களை எழுதுக.

| வ. எண். | பேச்சுவழக்கு | எழுத்துவழக்கு |
|---|---|---|
| 1. | மறஞ்சான் | மறைந்தான் |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

# 5 பண்படுத்தும் பழமொழிகள்



அன்பரசன் தன் தாத்தாவுடன் பூங்காவிற்குச் சென்றான். செல்லும் வழியில் நாய்கள் அவர்களை நோக்கிக் குரைத்துக் கொண்டு வந்தது. நாய்களை விரட்ட அன்பரசன் கல்லைத் தேடினான்.

தாத்தா : அன்பரசா! என்ன தேடுகிறாய்?

அன்பரசன் : நம்மை நோக்கி குரைத்துக் கொண்டு வரும் நாய்களை விரட்ட கல்லைத் தேடுகிறேன். ‘நாயைக் கண்டால் கல்லைக் காணோம்’ என்ற பழமொழிக்கேற்ப கல் கிடைக்கவில்லை தாத்தா.

தாத்தா : அந்தப் பழமொழிக்கு அதுவல்ல பொருள். கோயில் - களுக்குச் சென்று இறை வழிபாடு செய்கிறோம். அங்கு இருக்கும் கற்சிலைகளைக் கல்லாகப் பார்த்தால் அது இறைவனாகவோ, இறைவியாகவோ தெரியாது. அதையே இறைவனாகப் பார்த்தால், கல்லாகத் தெரியாது என்பதைத் தான் இப்பழமொழி கூறுகிறது.

அன்பரசன் : ஓ! அப்படியா, அப்படியானால் ‘ஆயிரம் பேரை கொன்றவன் அரை வைத்தியன்’ என்றார்களே! அதன் உண்மை விளக்கம் என்ன?

தாத்தா : பண்டையத்தமிழர்கள் சித்த வைத்தியத்தில் சிறந்து விளங்கினர். மூலிகைகளையும், அதன் வேர்களையும், அவைகளின் நோய்தீர்க்கும் குணத்தினையும் நன்கறிந்தவர்கள். மூலிகையில் மருந்துகள் தயாரித்து பல நோய்களைக் குணப்படுத்தினார்கள். அதற்கு ஆயிரக்கணக்கான வேர்களைப் பயன்படுத்தினார்கள். ஆகவே 'ஆயிரம் வேரை கொண்டவன் அரை வைத்தியன்' என்ற இப்பழமொழி வந்தது. இதுவே காலப்போக்கில் பேச்சு மாற்றத்தால் மருத்துவரை தவறாகப் பேசுவதுபோல் அமைந்தது.

( பேசிக்கொண்டே இருவரும் பூங்காவை அடைந்தனர்.அங்கு அவர்கள் ஒரு யானைப்பாகன் யானையுடன் நிற்பதைக் கண்டனர். யானை அதனிடம் வருவோருக்கு ஆசி வழங்கிக் கொண்டிருந்தது. )

அன்பரசன் : 'தாத்தா, யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்' என்கிறார்களே! அதற்கென்ன பொருள்.

தாத்தா : அது யானை கிடையாது. யானை என்பதை ஆ + நெய் என்று பிரிக்க வேண்டும். அதாவது பசுவின் நெய் என்றும், அஃதே போல், பூனை கிடையாது. பூ + நெய் என்பது பிரிக்க வேண்டும். பூ + நெய் அதாவது பூவில் ஊறும் தேன். நம் இளமைக்காலத்தில் பசுநெய்யை விரும்பி



உண்போம். வயதாகி முதுமை அடைந்ததும் உடல்நலம் குன்றினால் மருந்தை தேனில் கலந்து உண்போம்.

இளமையில் ஆநெய், முதுமையில் பூநெய் இதைத் தான் ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும் என்பர். இவ்வாறு இன்று அதன் பொருள் மாறுபட்டு வழங்கப்படுகிறது.

இருவரும் பூங்காவில் சுற்றி வந்தனர். பூங்காவில் குழந்தைகள் விளையாடுவதையும் மக்கள் உரையாடி மகிழ்வதையும் கண்டனர்.

( அன்பரசன் பூங்காவில் பஞ்சுமிட்டாய் விற்பதைப் பார்த்தான். தாத்தாவிடம் பஞ்சுமிட்டாய் வாங்கித் தருமாறு கேட்டான். பஞ்சு மிட்டாய் வாங்கியதும் அதைச் சுவைத்துக் கொண்டே தாத்தாவிடம் கேட்டான். )

அன்பரசன் : ‘குண்டுச்சட்டியில் ‘குதிரை ஓட்டியது போல்’ என்று ஒரு பழமொழி சொல்கிறார்களே. அதன் பொருள் என்ன? தாத்தா என்றான்.

தாத்தா : இதன் உண்மை விளக்கம். ‘குன்று செடியில் குதிரை ஓட்டியது போல்’ என்பதாகும். அக்காலத்தில் குதிரைகளில் தான் பெரும்பாலும் பயணம் செய்வார்கள். விவசாயிகள் தக்காளி, கத்தரி, வெண்டை, பூசணி,



அவரை, மிளகாய் போன்ற காய்கறிகளைப் பயிர் செய்திருப்பர். அவைகள் வளர்ந்து சிறுசிறு குன்றுகள் போல் தோற்றமளிக்கும். அந்த குன்று போன்ற செடிகளின் மீது குதிரையை ஓட்டாதீர்கள் என்பதைக் குறிப்பிடவே இப்பழமொழியானது கூறப்பட்டது.

( இவ்வாறு பேசிக்கொண்டே இருவரும் வீட்டிற்குச் சென்றனர். தாத்தா, உங்களுடன் பூங்காவிற்கு சென்று வந்தது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது என்றான் அன்பரசன் )

## படிக்கும் பகுதியில் இடம் பெறும் பழமொழிகளை அறிதல்



### உரையாடலாம் வாங்க!



நீங்கள் கேள்விப்பட்ட பழமொழிகளைக் கூறி பொருளைக் கூறுங்கள்.

வீட்டில் உள்ள உன் தாத்தா, பாட்டியிடம் பழமொழிகள் கேட்டு வந்து வகுப்பில் கலந்துரையாடுங்கள்.

### சிந்திக்கலாமா?



பழமொழிகளின் பொருள் மாறுபட்டு வழங்கப்படுவதற்குக் காரணம் என்னவாக இருக்கும்?

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. அன்பரசன், தன் தாத்தாவுடன் சென்ற இடம்______________________________

(அ) கடைத்தெரு (ஆ) பக்கத்து ஊர்

(இ) பூங்கா (ஈ) திருவிழா

2. கற்சிலை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது____________________

(அ) கல் + சிலை (ஆ) கற்று + சிலை

(இ) கற் + சிலை (ஈ) கள் + சிலை

3. குண்டுச்சட்டி - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது________________

(அ) குண்டு + சட்டி (ஆ) குண்டுச் + சட்டி

(இ) குண்டு + சுட்டி (ஈ) குண்டு + ச்சட்டி

4. மூலிகை - பொருள் கூறுக. ____________________________

(அ) நோய் தீர்க்கும் தாவரங்கள் (ஆ) மரங்கள்

(இ) கொடிகள் (ஈ) புதர் செடிகள்

5. ஆசி இச்சொல்லின் பொருள் ___________________________________________

(அ) புகழ்ந்து (ஆ) மகிழ்ந்து

(இ) இகழ்ந்து (ஈ) வாழ்த்து

## கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

அ) பேசி + கொண்டே = ____________________________

ஆ) பழைமை + மொழி = ____________________________

## வினாக்களுக்கு விடையளிக்க

1. அன்பரசன் யாரிடம் ஆசி வாங்கினான்?
2. "ஆநெய்", "பூ நெய்" ஆகியன எவற்றைக் குறிக்கின்றன?
3. "ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்" - இப் பழமொழியை சரியான நடையில் கூறுக.

## பழமொழியை சரியாக எழுதுக.

| | வழக்கு | உண்மை |
|---|---|---|
| எ.கா. | கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை | கழு தைக்க தெரியுமாம் கற்பூர வாசனை |
| 1. | யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும் | ------------------------------ ------------------------------ |
| 2. | ஆயிரம் பேரை கொன்றால் அரை வைத்தியன் ஆவான் | ------------------------------ ------------------------------ |
| 3. | குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டாதீர்கள். | ------------------------------ ------------------------------ |

## படித்தும், பாடியும் மகிழ்க!



நுண்மையும் சுருக்கமும்
ஒளியுடைமையும்
எண்மையும் என்று இவை
விளங்கத் தோன்றி
குறித்த பொருளை
முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப

- தொல்காப்பியர்

படத்திற்கேற்ற பழமொழியைத் தேர்வு செய்க.





1. சிறுதுளி பெரு வெள்ளம் ☐
2. யானைக்கும் அடி சறுக்கும் ☐
3. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் ☐

முதலெழுத்து மாற்றினால் வேறுசொல்



1. ஆதி மனிதன் வாழ்ந்த 'கை' குகை
நெருப்பில் இருக்கும் 'கை' ----------------
எதிரியிடம் கொள்ளும் 'கை' ----------------
பெண்கள் அணியும் 'கை' ----------------



2. காட்டின் ராஜா சிங்கம்
நகைகள் செய்வது ----------------
உடல் உறுப்புகளின் வேறுபெயர் ----------------
தமிழ்மொழி வளர்ந்தது ----------------



3. நீர் இறைத்திடுவது ஏற்றம்
புயலோ இயற்கை ----------------
தவறு இழைப்பது ----------------
வீட்டின் உள்ளே ----------------

## தெரிந்து கொள்வோம்

முன்னோர்கள் தங்கள்
அனுபவத்தைச் சுருங்கச்
சொல்லி விளங்க வைக்கக் கூறிய
மொழிகளே முதுமொழிகள் அல்லது
பழமொழிகள் ஆகும்.

## செயல் திட்டம்

ஐந்து பழமொழிகளை எழுதி, அவை இன்று உணர்த்தும் பொருளையும் அதன் உண்மையான பொருளையும் எழுதி வருக.

### இணைத்து மகிழ்வோம்

| | | |
|---|---|---|
| 1. Talk less work more | | நல்ல அறிவுரை விலை மதிப்பற்றது. |
| 2. No pain no gain | | மின்னுவதெல்லாம் பொன்னல்ல. |
| 3. Good council has no price | | குறைவாகப் பேசு அதிகம் வேலை செய் |
| 4. Haste makes waste | | உழைப்பின்றி ஊதியமில்லை |
| 5. All that glitters is not gold. | | பதறாத காரியம் சிதறாது |

# 6 முயல் அரசன்

ஒரு விவசாயியின் தோட்டத்தில் விளைந்திருந்த காய்களையும், கனிகளையும் வயிறாரத் தின்று வாழ்ந்து கொண்டிருந்தது ஒரு முயல். ஆனாலும் அதன் மனதில் ஒரு கவலை, அதற்குக் காரணம் அது வாழும் அந்த காட்டைப் பல்லாண்டு காலமாக ஆட்சி செய்து வரும் ஒரு சிங்கம் ஆகும். சிங்கத்திற்குக் கிடைக்கும் மரியாதை தனக்கும் கிடைக்க வேண்டும் என்று முயல் விரும்பியது.

சிங்கத்தை விடத் தானே சிறந்தவன் என்று சிங்கத்திற்கும், காட்டில் உள்ள பிற விலங்குகளுக்கும் நிரூபிக்க வேண்டுமென முயலுக்கு ஆசை தோன்றியது. உடனே முயல் சிந்தித்துச் செயல்படத் தொடங்கியது.

இனி, கதையைப் படிப்போம்.













ஓடினேனா.... நானா... உன்னைக் கண்டா...? உனக்குச் செய்தியே தெரியாதா? உனக்கு எங்கே தெரியப் போகிறது... இங்கு கூட்டம் நடந்த போது நீ தான் அப்பாவி விலங்குகளை வேட்டையாடிக் கொண்டிருந்தாயே...
எல்லா விலங்குகளும் கூட்டத்திற்கு வந்திருந்தனவா?
சில விலங்குகளைத் தவிர எல்லா விலங்குகளும் வந்திருந்தன..?
கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டது?
நீ இந்தக் காட்டின் அரசனாக இனிமேலும் நீடிக்கக் கூடாது என்று எல்லா விலங்குகளும் ஒரே மனதாகத் தீர்மானம் நிறைவேற்றின.
நான் அரசனாக நீடிக்கக் கூடாதா? அப்படியனால் வேறு யார் அரசனாக இருப்பது?
இந்தக் காட்டிலேயே பயங்கரமான மூர்க்கமான விலங்காகிய என்னைத் தான் எல்லா விலங்குகளும் புதிய அரசனாகத் தேர்ந்தெடுத்தன.
வேடிக்கைப் பேச்சு பேசுகிறாய்.. பலமற்ற சிறிய மென்மையான நீ இந்தக் காட்டுக்கு அரசனா? உன்னை இப்போதே ....?
உன் முதுகில் என்னை ஏற்றிக் கொண்டு போ. இக்காட்டு விலங்குகள் என்னைப் பார்த்து அஞ்சுவதை உனக்கு நிரூபித்துக் காட்டுகிறேன்.


இந்த முயல் எப்படிப் சிங்கத்தின் மேல் அமர்ந்து வருகிறது.
ம்... ம்... ம்... நட...
எல்லா விலங்குகளும் பயப்படுகின்றனவே...! முயல் கொடிய விலங்காகத் தான் இருக்குமோ!
முயல் அரசே நான் உங்களைத் தவறாகப் பேசியிருந்தால் மன்னித்து விட்டு விடுங்கள்.
இப்பொழுது இந்தக் காட்டுக்கு அரசன் யார்?
நீங்கள் தாம்
தாங்கள் தாம் இந்தக் காட்டுக்கு அரசன்
சத்தமாகச் சொல்
உன்னை மன்னித்து விடுகிறேன். நீ இந்தக் காட்டிலேயே இருக்கக்கூடாது எங்காவது ஓடிப்போய்விடு!
ஐயோ! என்னை விட்டுவிடுங்கள். நான் போய் விடுகிறேன்...!
இப்போதெல்லாம் முயல் வயிறு நிரம்பச் சாப்பிட்டு, நிம்மதியாக சுகமாகப் பகல் வேளைகளில் ஒரு குட்டித் தூக்கம் போட்டுக் கொண்டிருக்கிறது.

## உரையாடலாம் வாங்க!



- இக்கதையை உனது சொந்த நடையில் கூறுக.
- காட்டின் அரசனாக நீ எந்த விலங்கை அமர்த்துவாய்? காரணம் என்ன?
- சிங்கம் எதையும் ஆராயாமல் முயலின் பேச்சை உண்மை என ஏற்றுக்கொண்டது சரியானதா? கலந்துரையாடுக.

## *சிந்திக்கலாமா?*



தவறு செய்பவர்களை என்ன செய்யலாம்?
திருத்தலாமா? அப்படியே விட்டுவிடலாமா?

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பல்லாண்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது --------------------

(அ) பல் + லாண்டு　　(ஆ) பல் + ஆண்டு
(இ) பல + ஆண்டு　　(ஈ) பல + யாண்டு

2. செயலாக்கம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது --------------------

(அ) செய + லாக்கம்　　(ஆ) செயல் + ஆக்கம்
(இ) செயலா + ஆக்கம்　　(ஈ) செயல் + லாக்கம்

3. "அஞ்சுவது" - என்ற சொல்லின் பொருள் ------------------------------------

(அ) சந்தோசம்　　(ஆ) தூக்கம்
(இ) பயப்படுதல்　　(ஈ) விளையாடுதல்

4. "மூதாதையர்" - பொருள் கூறுக ------------------------------------------

(அ) சகோதரர்　　(ஆ) உறவினர்
(இ) குழந்தைகள்　　(ஈ) முன்னோர்

5. பேசி + இருந்தால் என்பதை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________

(அ) பேசியிருந்தால் (ஆ) பேசியிரு
(இ) பேசிஇருந்தால் (ஈ) பேசவிருந்தால்

6. "மூர்க்கத்தனம்" - பொருள் கூறுக. ________________________________________

(அ) நட்பான (ஆ) கடுங்கோபமான
(இ) அன்பான (ஈ) பாசமான

## வினாக்களுக்கு விடையளி

1. முயலின் கவலைக்குக் காரணம் என்ன?
2. விலங்குகளின் கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டதாக முயல் கூறியது ?
3. முயல் தான் அரசன் என்பதை நிரூபிக்க சிங்கத்தை என்ன செய்யக் கூறியது?
4. சிங்கத்தை மன்னித்து விட்டுவிட முயல் கூறிய நிபந்தனை என்ன?
5. விலங்குகள் உண்மையில் எதைக் கண்டு அஞ்சின?

**எதிர்ச்சொல்லால் சொற்றொடரை நிறைவு செய்க.**

1. நிழலின் அருமை _______________ இருக்கும் போது தான் தெரியும்.
2. ஒரு பொருளை ஆக்கல் மிக கடினம். ஆனால் _______________ மிக எளிது.
3. நாம் இருக்கும் இடத்தை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர _______________________ போட்டு கொண்டிருக்கக் கூடாது.
4. மற்றவர் நம்மை புகழ்ந்தாலும் சரி ________________ சரி. நம் வேலையை நம் சரியாக செய்ய வேண்டும்.
5. வேற்றுமையிலும் ________ காணும் நாடு நம் இந்தியா.
6. இளமையில் நாம் உழைத்தால் ______________ யில் ஓய்வெடுக்கலாம்.

| |
|---|
| இகழ்ந்தாலும் |
| சத்தம் |
| வெயிலில் |
| ஒற்றுமை |
| முதுமை |
| அழித்தல் |

**சக்கரம் காட்டும் ஈரெழுத்துச் சொற்கள் என்ன என்பதை கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடிக்க.**

1. நீர் நிலை பெயர் ____________________________
2. தவறுக்கு எதிர்ப்பதம் ______________________
3. குழந்தைகள் விரும்பி சாப்பிடுவர் __________
4. மலைக்கு மற்றொரு பெயர் _________________
5. வாய்விட்டு நீ ______________________________
6. தந்திரமான விலங்கு ______________________
7. மழைக்கு மற்றொரு பெயர் _________________
8. நெல்லில் இருந்து பெறப்படும் தின்பண்டம் _________________




**எது முன்னே? எது பின்னே? அகர வரிசைப்படுத்துக.**



தங்கம், திங்கள், துடைப்பம், தென்றல், தைப்பொங்கல்,
தோரணம், தீபாவளி, தொட்டி, தாவரம், தூக்கணாங்குருவி, தேசியக்கொடி

# 7 சான்றோர் மொழி - வெற்றி வேற்கை

## உதவியால் பெறும் நன்மை

தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒரு விதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி, ஆள்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலாகும்மே

- அதிவீரராமபாண்டியர்



பொருள் :

பழமை வாய்ந்த ஆலமரத்தில் காய்க்கும் சிறு பழத்தின் விதையானது, தெளிந்த நீருள்ள குளத்தில் வாழும் மீனின் முட்டையை விட மிகச் சிறியதாக இருக்கும். அந்த ஆலமரத்தின் சிறிய விதையானது, ஒரு நாள் பெரிய மரமாக ஓங்கி வளர்ந்து நிற்கும் பொழுது, அம்மரத்தின் நிழலில் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகியவற்றோடு மன்னனும் மற்றவர்களும் தங்கும் அளவிற்கு நிழலினைக் கொடுக்கும்.

அது போல நீங்கள் செய்யும் சிறுசிறு உதவிகள் கூட மற்றவர்களுக்கு மிகப்பெரிய பயனைத் தரும் என்று ஆசிரியர் இப்பாடலின் மூலம் நமக்கு உணர்த்துகிறார்.



## உரையாடலாம் வாங்க!

- பாடலின் பொருளை உமது சொந்த நடையில் கூறுக.
- உனக்கு உனது நண்பன் செய்த சிறிய உதவி, அந்த நேரத்தில் பெரியதாக இருந்த அனுபவத்தைப் பற்றிப் பேசு.

## *சிந்திக்கலாமா?*

சிறு சிறு உதவிகளைப் பிறருக்குச் செய்வது பற்றி உனது கருத்து என்ன? வகுப்பில் கலந்துரையாடுக.

### படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. தெள்ளிய இச்சொல்லின் பொருள் ________________

(அ) மெல்லிய (ஆ) இளகிய

(இ) முதிர்ந்த (ஈ) அழகிய

2. ஆல் இச்சொல்லின் பொருள் ________________

(அ) வேலமரம் (ஆ) ஆலமரம்

(இ) அரசமரம் (ஈ) வேப்பமரம்

3. கயம் இச்சொல்லின் பொருள் ________________

(அ) நீர்நிலை (ஆ) பயம்

(இ) வானிலை (ஈ) பருவநிலை

4. புரவி இச்சொல்லின் பொருள் ________________

(அ) யானை (ஆ) பூனை

(இ) ஆள் (ஈ) குதிரை

5. பெரும்படை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

(அ) பெருமை+படை (ஆ) பெரும்+படை

(இ) பெரு+படை (ஈ) பெரிய+படை

6. நிழல் + ஆகும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ____________

(அ) நிழல்ஆகும் (ஆ) நிழலாகும்

(இ) நிழல்லாகும் (ஈ) நிழலாஆகும்

## வினாக்களுக்கு விடையளி

1. ஆலமரத்தின் விதை எவ்வாறு இருக்கும் என்று அதிவீரராமபாண்டியர் குறிப்பிடுகிறார்?

2. ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை?

3. இப்பாடலின் பொருள் எதனுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது?

### பொருத்தமான நிறுத்தற்குறி இடுக.

1. ஆகா என்ன சுகம் தெரியுமா

2. என்னைக் கட்டிப் போடுகிறார்கள்

3. ஆகா இது என்ன பிரமாதம்

4. நான் என்ன வேலை செய்ய வேண்டும்

5. காய்கறிக்கடையில் வேண்டிய தக்காளி கத்தரி புடலை ஆகியவற்றை வாங்கி வந்தேன்.



## தமிழோடு விளையாடுவோம்

**காலியிடங்களைக் கூடையில் உள்ள சொற்களைக் கொண்டு நிரப்புக.,**

**பல்லினை மெல்லத் தொடு**

இல்லம் | ______ | ______

______ | பகல்

______

**நாவினை உள்ளே தள்ளு**

______ | குளம் | ______

______ | ______

வெள்ளரி

**நாவினைச் சுழற்றி முழக்கு**

______ | ______ | சுழல்

யாழ் | ______

______

**கூடையில் உள்ள சொற்கள்:**

புல் | குளிர் | பழம்

நூல் | வாள் | மல்லி | தமிழ்

பாழ் | பள்ளி | எழுத்து

கிளி | கடல்

### செயல் திட்டம்

நூலகத்திற்குச் சென்று சிறுவர் இதழ்களில் உள்ள படக்கதைகளைப் படித்து மூன்று கதைகளை உனது குறிப்பேட்டில் எழுதிவந்து வகுப்பறையில் கூறுக.



## சொல் ஒன்று, பொருள் இரண்டு - கண்டுபிடி

எ.கா. வயலில் மேய்வது ஆடு

அழகாய் நடனம் ஆடு

1. நீர் நிலைகளில் ஒன்று ---------------------------

   ஐந்துக்குப் பின் ---------------------------

2. உண்மை என்பது ---------------------------

   உடம்பின் வேறு பெயர் ---------------------------

3. ஊசியில் கோர்ப்பது ---------------------------

   புத்தகம் என்பது ---------------------------

4. சாப்பிட உதவும் ---------------------------

   கதவை நீயும் ---------------------------

5. பறவைகளின் வசிப்பிடம் ---------------------------

   ஒன்றாக சேர்வதற்கு இப்படியும் சொல்லலாம் -----------------------

### கலையும் கைவண்ணமும்

பென்சில் சீவிய துகள்களைக் கொண்டு படங்களை உருவாக்குவோம்.

**எ.கா.**



## இணைந்து செய்வோமா?


தட்டு
உலகம்
பலகை
பட்டு
நிழல்
நிறம்
தெய்வம்
தென்னை
சிறுவர்கள்
சிற்றுண்டி
கொக்கு
படகில் இருக்கும் சொற்களுள் முதல் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எடுத்து முதல் பழத்தில் எழுதுக. இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எடுத்து இரண்டாம் பழத்தில் எழுதுக.


சிறுவர்கள்
சிற்றுண்டி


தட்டு
பட்டு

## தெரிந்து கொள்வோம்

மீன்களில் 22,000 வகையான மீன்கள் உள்ளன. இவற்றுள் மிகச் சிறியது கோபி வகையைச் சார்ந்தது. இதன் நீளம் 13 மி.மீ. மிகப்பெரிய மீன் திமிங்கலச் சுறா. இதன் நீளம் 18 மீட்டர்.





## செயல் திட்டம்

செய்தித்தாளில் பிறருக்கு உதவியதாக வரும் செய்திகளைச் சேகரித்து செய்தித் தொகுப்பு ஒன்று தயார் செய்க மற்றும் கீழே உள்ள செய்தித் துணுக்கு கட்டத்தில் ஒட்டுக.

**செய்தித் துணுக்கு**

## இணைப்புச் சொற்களை அறிவோமா?

இரண்டு தொடர்களை இணைக்கப் பயன்படும் சொற்கள் இணைப்புச் சொற்கள் ஆகும்.

சில இணைப்புச் சொற்களையும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிவோம்.

அதனால், ஆகவே, ஆனால், எனினும், ஆகையால், எனவே, இருந்தாலும் போன்றவை

1. கந்தன் கீழே விழுந்துவிட்டான் அதனால் மேற்கொண்டு ஓட முடியவில்லை.
2. குளிர்காலத்தில் மிகவும் குளிரும் ஆகவே கம்பளி ஆடை அணிதல் நல்லது.
3. காமராஜர் எளிய குடும்பத்தில் பிறந்தவர் ஆனாலும் ஏற்றம் பல கண்டவர்.
4. புறாவால் பறக்க முடியவில்லை ஏனெனில் அதன் சிறகில் காயம் ஏற்பட்டிருந்தது.
5. போதுமான மழை இல்லை ஆகையால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும்.
6. மிகவும் திறமை உள்ளவர் என்றாலும் கர்வம் கொள்ள கூடாது.
7. நாய் விலங்கினம் தான் இருந்தாலும் அதன் நன்றி உணர்வு பாராட்டத்தக்கது.

### பயிற்சி

ஆகவே, எனவே, ஆகையால், ஆனால், இருந்தாலும் ஆகிய இணைப்புச் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக.

1. ------------------------------------------------------------------

2. ------------------------------------------------------------------

3. ------------------------------------------------------------------

4. ------------------------------------------------------------------

# 8 விடியும் வேளை

மேகமலை ஓர் அழகான மலைக்கிராமம். மலையும், சோலையும் சூழ்ந்து காணப்படும். மலையில் அமைந்திருக்கும் அருவிகளில் எந்த நேரமும் தண்ணீர் கொட்டிக்கொண்டே இருக்கும். ஊரைச் சுற்றிலும் பசுமையான வயல்கள் சூழ்ந்திருக்கும் வாய்க்காலும் வரப்பும் நிறைந்த வயல்களில் ஆட்கள் வேலை செய்து கொண்டிருப்பார்கள்.

ஓர் அழகிய மாலைப்பொழுது. மேற்குத்திசையில் சூரியன் மறையத் தொடங்கியது. ஆடு மாடுகளும் அதை மேய்க்கும் ஆட்களும் தங்கள் இருப்பிடம் நோக்கி சென்றனர். வயல்களில் வேலை செய்தவர்களும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர். பறவைகள் எல்லாம் தத்தம் கூடுகளுக்குக் குதூகலமாகத் திரும்பின. ஊர் அடங்கியது.

மறுநாள் காலை பொழுது புலர்ந்தது. கருமேகங்கள் வானத்தில் திரண்டன. மின்னலும், இடியும் தோன்றின. மழையின் அறிகுறியாக ஈரக்காற்று வீசியது. மண் வாசனை எங்கும் பரவியது. சிறிது நேரத்தில் தூறல், பின் கனத்த மழையாகப் பெய்யத் தொடங்கியது. தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. அருவியில் வெள்ளமென தண்ணீர் ‘சோ’ என்று கொட்டியது.



மழை பெய்து ஓய்ந்தது. சாலைகளில் அங்கும் இங்குமாகத் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. மழையில் நனைந்த மரக்கிளையிலிருந்து நீர்த்திவலைகள் சொட்டுச்சொட்டாக விழுந்தன. பஞ்சுப்பொதிகள் போன்ற வெண் மேகக்கூட்டங்கள் வளைந்து நெளிந்து செல்லும் பாதையை மறைத்து மிதந்தபடி சென்றன. ஊரின் அருகில் இருந்த ஏரி நிரம்பி கடல்போல் காட்சியளித்தது. தெருக்களில் ஓடிய மழைநீரில் குழந்தைகள் குதித்து கும்மாளமிட்டனர். சிறுவர்கள் காகிதக்கப்பல் செய்து மிதக்கவிட்டு விளையாடினர்.

மழையின் பயனால் பயிர்கள் செழித்து வளரும்; விளைச்சல் பெருகும் ; அதனால் ஊர் வளம் பெறும் என்று மக்கள் மகிழ்ந்தனர்.



எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு உரைப்பகுதிகளைப் படித்தல், தமக்கான நடையில் எழுதுதல்.

## உரையாடலாம் வாங்க!

- மேகமலை கிராம வருணனையை உன் சொந்த நடையில் கூறுக.
- உமது ஊரின் மாலை நேரக் காட்சிகளை வருணித்துக் கூறுக.
- பாடப்பகுதியை வாய்விட்டுச் சரியான உச்சரிப்புடன் படித்துக் காட்டுக.
- இது போன்ற அழகான ஊரில் நீ வசிக்கிறாயா? அல்லது
- அது போன்ற ஊருக்குச் சென்றதுண்டா?



## சிந்திக்கலாமா?



பரபரப்பான
நகர வாழ்க்கை
இயற்கையுடன் கூடிய
கிராம வாழ்க்கை
நீ எதை விரும்புகிறாய்?
ஏன்?

1. 

2. 

### படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**சரியான பலூன்களை எடுத்துப் பொருத்துக.**

1. குதூகலம்
2. புலர்ந்தது
3. நீர்த்திவலைகள்
4. பஞ்சுப்பொதிகள்

அளவில்லா மகிழ்ச்சி

சந்தோசம்

மறைந்தது

விடிந்தது

பஞ்சு மூட்டைகள்

சாக்கு மூட்டை

நீர்த் துளிகள்

பனித் துளிகள்

மூட்டை

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பெருக்கெடுத்து இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

(அ) பெரு + கெடுத்து (ஆ) பெருக்கு + எடுத்து

(இ) பெருக்கெ + எடுத்து (ஈ) பெரு + குஎடுத்து

2. ஈரக்காற்று இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________________

(அ) ஈர + காற்று (ஆ) ஈ + ரக்காற்று

(இ) ஈரம் + காற்று (ஈ) ஈரமான + காற்று

3. வெள்ளம் + என என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ___________________

(அ) வெள்ளம்என (ஆ) வெள்ளமென

(இ) வெள்ளமன (ஈ) வெள்ளைமன

4. சொட்டு + சொட்டாக என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________________

(அ) சொட்டுச்சொட்டாக ஆ) சொட்டும்சொட்டாக

(இ) சொட்டுசொட்டாக (ஈ) சொட்டிடும்சொட்டாக

5. காகிதம் + கப்பல் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________

(அ) காகித கப்பல் (ஆ) காகிதக்கப்பல்

(இ) காகிதம்கப்பல் (ஈ) காகிதக்கப்பல்

## வினாக்களுக்கு விடையளி

1. அழகிய மலைக்கிராமத்தின் பெயர் என்ன?

2. கிராமத்தில் உனக்குப் பிடித்த இயற்கைக் காட்சிகளை எழுதுக.

3. மழையில் சிறுவர்கள் எதனை செய்து மிதக்கவிட்டார்கள்?

## பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள வருணனைச் சொற்களை எழுதுக.

எ.கா : பச்சைப்பசேல் என்ற வயல்வெளி ____________________________________



## தமிழோடு விளையாடலாம்

### புதிய சொற்களை உருவாக்கலாமா?




1. அம்மி
2. 
3. 
4. 
5. 
6. 
7. 
8. 

### வண்ணமிட்டு மகிழ்வோமா!



பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சிறு தானிய உணவுகளே நம் ஆரோக்கியத்திற்கு ஏற்றது குதிரை வாலி அரிசி, தினை, வரகரிசி, கேழ்வரகு, கம்பு, சோளம், பனிவரகு அரிசி, மாப்பிள்ளைச்சம்பாஅரிசி போன்றவை சிறு தானியங்கள் ஆகும். இந்தச் சிறுதானியங்களைக்கொண்டு பல உணவு வகைகளை மண் பானைகளில் தயாரித்துப் பயன்படுத்துவது மிகவும் நல்லது. நாம் உண்ட உணவு முழுமையாகச் செரித்த பிறகு தான் அடுத்த வேளை உணவை உண்ண வேண்டும். இதைத் தான் நம் முன்னோர் ‘பசித்துப் புசி‘ என்றனர். இவற்றைத் தவிர்த்துவிட்டுத் துரித உணவுகளைச் சாப்பிடத் தொடங்கியதே பல்வேறு நோய்கள் ஏற்படக் காரணமாகிறது.

சிறு தானிய உணவுகளை உண்போம்!
ஆரோக்கியமான வாழ்வைப் பெறுவோம்!


தினை


வரகரிசி


மாப்பிள்ளை சம்பா அரிசி


கம்பு


சோளம்


குதிரைவாலி அரிசி


பனிவரகு அரிசி


கேழ்வரகு அரிசி

1. எவ்வகை உணவு முறை நமக்கு ஏற்புடையது?

2. சிறு தானியங்களுள் ஏதேனும் நான்கினை எழுதுக.

3. துரித உணவு வகைகளை உண்ணக் கூடாது. ஏன்?

## தேவையான பொருள்கள் :

வெள்ளை வரைபட அட்டை, சிறிதளவு மணல், பசை, பென்சில், வண்ணப் பொடி

## செய்யும் முறை

வெள்ளை வரைபட அட்டையில் உனக்குப் பிடித்த பொம்மை படத்தினை வரைந்து கொள். வரைந்த பொம்மையின் ஆடைகளில் மட்டும் பசையினைத் தடவு. தடவிய பசை காய்வதற்கு முன் பென்சில் துருவல்களை அடுக்கு. நன்றாகக் காயவை. அழகிய பென்சில் துருவல் சிற்பம் தயார்.



## தெரிந்து கொள்வோம்

- இரண்டு சொற்கள் ஒரே கருத்தினை வலுப்படுத்துவது நேரிணை
  எ.கா: ஓடி ஆடி, வாடிவதங்கி, பேரும் புகழும், நோய்நொடி,
  ஈடுஇணை
- இரண்டு எதிர்ச்சொற்கள் ஒரே கருத்தினை வலுப்படுத்துவது எதிரிணை.
  எ.கா: அல்லும்பகலும், உயர்வு தாழ்வு, குறுக்கும் நெடுக்கும்
  (ஒவ்வொரு சொற்களை பயன்படுத்தி தொடர் உருவாக்க செய்யலாம்)

## செயல் திட்டம்

சிறுதானியங்கள், நவதானியங்கள் ஆகியவற்றைச் சேகரித்து, ஒட்டி அதன் பெயரை எழுதிப் படத்தொகுப்பு தயார் செய்க.

# 9 கரிகாலன் கட்டிய கல்லணை

சாத்தூர் அரசுப்பள்ளி ஆண்டுச்சுற்றுலா செல்ல ஆசிரியர்களும், மாணவர்களும் முடிவு செய்தனர்.

ஆசிரியர் : இந்த ஆண்டு சுற்றுலாவிற்கு எங்கே செல்லலாம்? என்பதைத் தேர்வு செய்வோம்.

கலா : ஐயா, இந்த ஆண்டு ஏதாவது கடற்கரைக்குச் செல்வோமா?

மாதங்கி : இல்லை ஐயா, பழங்கால அணைக்கட்டுகளுக்குச் செல்வோம். ஆற்றின் குறுக்கே பாய்ந்து வரும் நீரைத் தடுத்து அணையாகக்கட்டி காடுகளைத் திருத்தி விளைநிலமாக்கினார். விவசாயம் விரிவடைந்தது. அது பற்றி அறிவோமா?

கலா : நல்ல யோசனை. அப்படியானால் மிகவும் பழமையான அணைக்கட்டை எங்கு காணலாம்?

ஆசிரியர் : சோழ மண்டலத்திலுள்ள கல்லணை மிகவும் பழமையானது. இந்த அணை தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. நாம் எல்லோரும் திருச்சிக்கு மிக அருகில் உள்ள கல்லணைக்குச் செல்வோம். தயாராகுங்கள்!

( அனைவரும் பள்ளிப்பேருந்தில் திருச்சியை நோக்கிச் சென்றனர். அங்கு உணவு உண்டபின் கல்லணையை அடைந்தனர். )

ஆசிரியர் : மாணவர்களே! இது தான் கல்லணை. இதனைக் கட்டியவர் சங்ககாலச் சோழமன்னர்களில் சிறந்தவரான கரிகால்சோழன்.

கலா : ஐயா! எவ்வளவு பெரிய அணை! எவ்வளவு நீளமாகவும், மிக அழகாகவும் உள்ளது!

ஆசிரியர் : வாருங்கள்! எல்லோரும் அணையைச் சுற்றிப் பார்ப்போம்.

மணி : ஐயா, இந்த அணையைக் கட்டிய கரிகாலனைப் பற்றி கூறுங்கள். அவர் வரலாற்றினையும், இந்த அணையை கட்டிய முறையையும் அறிந்து கொள்ள ஆவலாய் உள்ளோம்.

ஆசிரியர் : கரிகாலனின் இயற்பெயர் திருமாவளவன். அவருக்குப் பெருவளத்தான் என்ற மற்றொரு பெயரும் உண்டு. அவர் தந்தையின் பெயர் இளஞ்சேட்சென்னி. சோழவம்சத்தை சார்ந்தவர்கள். தனக்கு ஒப்பாரும் இல்லை, தனக்கு மிக்காரும் இல்லை எனப் புகழ் பெற்று விளங்கியவன் கரிகாலன். காவிரிப்பூம்பட்டினம் உறையூரை தலைநகரமாகக் கொண்டு கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தான்.

மாதங்கி : இவருக்கு திருமாவளவன் என்று பெயரிருக்க கரிகாலன் என்ற பெயர் எப்படி வந்தது?

ஆசிரியர் : கரிகாலன் என்பதற்குக் கருகிய காலை உடையவன் என்பது பொருள். இளம் வயதில் இவருக்கு ஏற்பட்ட தீ விபத்தில் கால் கருகி விட்டது. இதன் காரணமாக இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று.

கலா : அணை கட்டும் எண்ணம் கரிகாலனுக்கு எப்படி வந்தது?

ஆசிரியர் : பல நூற்றாண்டுகளுக்கு முன் தமிழகத்தை ஆண்ட கரிகால்சோழன் அடிக்கடி காவிரி நதியில் பெருவெள்ளம் வந்து விவசாயம் பாதிக்கப்படுவதையும் அதிகப்படியான நீர் எதற்கும் பயன்படாமல் கடலில் கலப்பதையும் கண்டான். அதே சமயம் கோடைகாலத்தில் மக்கள் நீர் இன்றி துயரப்படுவதை அறிந்து, அதனை தடுக்கும் பொருட்டு பெரியதோர் அணையைக் காவேரி ஆற்றின் குறுக்கே கட்ட முடிவெடுத்தான்.



மாதங்கி : கரிகால்சோழன் அணையைக் கட்டுவதற்கு பயன்படுத்திய கட்டுமானப்பொருள்கள் என்ன? அப்போதே இரும்புக் கருவிகள், சிமெண்ட இருந்தனவா?



ஆசிரியர் : இல்லை மாதங்கி. கல்லணையைக் கட்டிய முறையானது மிகவும் அற்புதமானது. காவிரி ஆற்றின் மீது பெரிய பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டார்கள். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் புதையும். அந்தப் பாறைக்கு மேல் மற்றுமொரு பாறையினை வைப்பார்கள். பாறைகளுக்கு நடுவே தண்ணீரில் கரையாத ஒரு வித ஒட்டும் களிமண்ணைப் பூசுவார்கள். இதனால் இரண்டு பாறைகளும் ஒட்டிக்கொள்ளும்.

இப்படிப் பாறைகளின் மேல் பாறைகளைப் போட்டு ஒரு நொடிக்கு இரண்டு லட்சம் கனஅடி அளவில் வேகமாகப் பாய்ந்து செல்லும் காவிரி நீரின் குறுக்கே கட்டிய அணை தான் இந்த மகத்தான அணை.

இரும்புக்கம்பிகளையும், சிமெண்ட்டையும் கொண்டு கட்டப்படும் பாலங்கள் கூட அதிகபட்சம் ஐந்நூறு ஆண்டுகளில் பலமிழந்து விட நேரிடும். ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகள் நெருங்கியும் இன்றும் உறுதியோடு நிற்கும் பழந்தமிழரின் தொழில்நுட்பம் உலகோரை வியப்படையச் செய்கிறது.

இதன் பழமைக்குச் சான்றாக இங்கு ஒரு கல்வெட்டும் உள்ளது.

மணி : பெரும் வெள்ளக்காலங்களில் ஆற்றுநீர்ப்பாசனம் இங்கு எவ்வாறு கையாளப்பட்டது ஐயா!

ஆசிரியர் : நன்றாகக் கேட்டாய் மணி! திருச்சியில் அகண்ட காவிரி என அறியப்படும் காவிரி முக்கொம்பில் உள்ள மேலணையில் காவிரி, கொள்ளிடம் என இரண்டாகப் பிரிகிறது. அதில் காவிரி கல்லணையை வந்தடைகிறது. கல்லணையிலிருந்து காவிரி நான்கு துணை ஆறுகளாகப் பிரிகிறது. அவை காவிரிஆறு, வெண்ணாறு, புதுஆறு, கொள்ளிடம் ஆகும். பாசன காலங்களில் காவிரி, வெண்ணாறு, புதுஆறு ஆகியவற்றிலும், வெள்ள காலங்களில் கொள்ளிடத்திலும் தண்ணீர் கல்லணையிலிருந்து திறந்து விடப்படும்.

அதாவது வெள்ளக்காலங்களில் கல்லணைக்கு வரும் நீர் காவிரிக்கு இடப்புறம் ஓடும் கொள்ளிடம் ஆற்றில் முக்கொம்பில் காவிரியிலிருந்து பிரிந்த கிளையாற்றில் திருப்பி விடப்படும். எனவே டெல்டா மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வெள்ளத்தின் அழிவிலிருந்து காப்பாற்றப்படுகிறது.

கல்லணை உலகப்பழமை வாய்ந்த அணையாகும். தற்போது உலகில் உள்ள பழமையான அணைகளில் இன்று வரை புழக்கத்திலுள்ள அணையும் இது தான் என்று அறியப்படுகிறது. இன்றளவும் சோழர்களின் கட்டிடக்கலையின் புகழை தன்மீது தாங்கி வான் கண்டு நிற்கிறது.

இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை என அறியப்படும் சர்தார் காட்டன் என்ற ஆங்கிலேயப் பொறியாளர் கரிகாலன் கட்டிய கல்லணையை மகத்தான அணை (GRAND ANICUT) என்று பெயர் சூட்டினார். இது பழந்தமிழரின் தொழில்நுட்பத்திற்கு சான்றாகும். இது இன்றுவரை அரும்சாதனையாக உள்ளது.

மாணவர்கள் : மிக்க நன்றி ஐயா! கல்லணை கண்ணையும், கருத்தையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. கல்லணை உள்ளவரை கரிகாலனின் புகழ் நிலைத்திருக்கும். வாழ்க அவர் தொண்டு.

## உரையாடலாம் வாங்க!



- கல்லணை பற்றி பாடத்தில் வரும் செய்திகளைக் கூறுக.
- உமது ஊரில் உள்ள நீர்நிலைகளை கூறுக.
அது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.

## *சிந்திக்கலாமா?*



மழைநீர் சேகரிப்பு தொட்டி யார், யார் வீட்டில் உள்ளது?
அது ஏன் அமைக்கின்றனர்?

பிறர் கூறுவதைக் கவனமுடன் கேட்டல் / வினாக்கள் எழுப்புதல்,
அவற்றின் மீதான தங்கள் கருத்துகளை / எதிர் வினைகளை வெளிப்படுத்துதல்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான பழத்தைத் தேர்ந்தெடுக்க

1. சங்ககாலம் இச்சொல் குறிக்கும் பொருள்

------------------------------

2. இயற்பெயர் இச்சொல் குறிக்கும் பொருள்

------------------------------

3. ஒப்பார் இச்சொல் குறிக்கும் பொருள்

------------------------------

4. மிக்கார் இச்சொல் குறிக்கும் பொருள்

------------------------------

5. அகண்ட இச்சொல் குறிக்கும் பொருள்

------------------------------



## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. உலகப்பழமை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

   (அ) உலக + பழமை (ஆ) உலகம் + பழமை

   (இ) உலகப் + பழமை (ஈ) உலகு + பழமை

2. வெள்ளக்காலம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

   (அ) வெள்ள + காலம் (ஆ) வெள்ளை + காலம்

   (இ) வெள்ளம் + காலம் (ஈ) வெள் + காலம்

3. வந்துடைகிறது இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

   (அ) வந்தடை + கிறது (ஆ) வந்த + அடைகிறது

   (இ) வந்த + டைகிறது (ஈ) வந்து + அடைகிறது

4. தொழில் + நுட்பம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________________

   (அ) தொழில்நுட்பம் (ஆ) தொல்நுட்பம்

   (இ) தொலைநுட்பம் (ஈ) தொழிநுட்பம்

5. நீர் + பாசனம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________________

   (அ) நீர்பாசனம் (ஆ) நீர்ப்பாசனம்

   (இ) நீர்ப்பசனம் (ஈ) நீர்பாசனம்

## பந்தை அதன் எதிர்ச்சொல் கூடையில் போடலாமா?












கனிகள் இன்பம் வெற்றி வேற்றுமை சிறியோர்







### சரியானதை எடுத்து எழுதுக

1. கல்லணை அமைந்துள்ள மாவட்டம் ________________( திருச்சி / தஞ்சாவூர் )
2. தமிழ்நாட்டில் காவிரியின் முக்கிய துணையாறு ______________________________ (வைகை / கொள்ளிடம் )
3. கல்லணையைக் கட்டிய அரசன் ________________(கரிகாலன் / இராசராசன்)
4. கல்லணை ________________________ தொழில்நுட்பத்திற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது. (பழந்தமிழர் / இன்றைய)
5. இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை _____________(கரிகாலன் / சர்தார் காட்டன்)

### வினாவிற்கு ஏற்ற விடையளிக்க.

1. கரிகாலனின் இயற்பெயர் என்ன?
2. கரிகாலன் என்று பெயர் வரக் காரணம் என்ன?
3. கரிகாலன் கல்லணையைக் கட்ட காரணம் யாது?
4. கல்லணையின் சிறப்பாக நீ நினைப்பதை எழுதுக.
5. கல்லணையை மகத்தான அணை என்று கூறியவர் யார்?



## தமிழோடு விளையாடலாம்

ஓர் எழுத்தைக் கண்டுபிடி.
நான்கு சொல்லைப் பெறலாம்.

இன்பம்
இஞ்சி இ இந்தியா
இளமை

க _____ வு
சா_____ம் ப_____ம்
ச_____ம்

வா_____ம்
பா____ம் கா _____ ம்
ம_____ம்

_____ளிர்
____டம் ____ரங்கு
____ற்றம்

## தெரிந்து கொள்வோம்

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய அணைகள்

1. கல்லணை
2. மேட்டூர் அணை
3. வைகை அணை
4. சாத்தனூர் அணை
5. பவானி சாகர் அணை

## செயல் திட்டம்

நூலகத்திற்குச் சென்று வரலாற்று நூல்களைப் படித்து யாரேனும் ஐந்து அரசர்களின் பெயர்களையும், அவர்கள் செய்த நற்செயல்களையும் தெரிந்து கொண்டு அட்டவணையை நிரப்பி வருக.

| வ.எண். | பெயர் | சிறப்பு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

## அகர முதலி

1. அண்டை நாடு - பக்கத்து நாடு
2. அண்ணல் - கருணை உடையவர்
3. ஆசி - வாழ்த்து
4. ஆட்டாந்தொழு - ஆடு கட்டும் இடம்
5. ஆல் - ஆலமரம்
6. ஆவி - உயிர்
7. ஆயத்தப்படுத்துதல் - தயார் செய்தல்
8. இலகுவான - எளிமையான
9. எண்ணும் - நினைக்கும்
10. என்னில் - எனக்குள்
11. ஓலைக்கொட்டான் - ஓலையால் செய்யபட்ட சிறு கூடை
12. கனிந்து - பழுத்து
13. முறியடித்து - தகர்த்து
14. கொடியடுப்பு - பக்க அடுப்பு
15. சூழ்ச்சி - தந்திரம்
16. சேதாரம் - வீணாதல்
17. துயரம் - துன்பம்
18. துளிர் - இளம் இலை
19. தையலர் - பெண்கள்
20. தொலைவு - தூரம்
21. மன்னர் - அரசர்
22. மாட்டாந்தொழு - மாடு கட்டும் இடம்
23. முளைப்பாரி - நவதானியங்கள் முளைத்துச் சிறிது வளர்ந்து நிறைந்துள்ள மண்பாண்டம்
24. பொதி - மூட்டை
25. வல்லமை - வலிமை
26. வியப்பு - ஆச்சரியம்
27. விரைவில் - வேகமாக
28. வெட்டவெளி - திறந்த வெளி
29. வேளை - நேரம்

| திறன் பகுதி | திறன் | பாட எண் |
|---|---|---|
| **கேட்டல்** | | |
| 1. | ஓசைநயமிக்க பாடல்களைக் கேட்டுப் புரிந்து கொள்ளல் | 1 |
| 2. | நாட்டுப்புறக் கதைகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளல் | 3 |
| 3. | சூழ்நிலையில் உற்றுக்கேட்ட விவரங்களைப் புரிந்து கொள்ளல். | 9,7,4 |
| **பேசுதல்** | | |
| 1. | தங்குதடையின்றிப் பேசுதல் | 2 |
| 2. | வருணனை கலந்து பேசுதல் | 8 |
| **படித்தல்** | | |
| 1. | கதைகளை நிறுத்தற்குறிகளுக்கு ஏற்பப் படித்தல் | 3,6 |
| **எழுதுதல்** | | |
| 1. | சொல்லக் கேட்டுப் பிழையின்றி எழுதுதல் | அனைத்தும் |
| 2. | பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை கூறுதல் | 5 |
| 3. | புதிர்களை எழுதுதல் | 6,7 |
| **படைப்பாற்றல்** | | |
| 1. | படம் பார்த்து வருணித்து எழுதுதல் | 8 |
| 2. | படத்தொகுப்பு உருவாக்குதல் | 8 |
| **நடைமுறை இலக்கணம்** | | |
| 1. | இணைப்புச் சொற்கள் அறிதல் | 7 |
| 2. | ஐம்பால் | 2 |
| **தானே கற்றல்** | | |
| 1. | சிறுசிறு கதைகளைப் படித்தல் | 3 |
| 2. | அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருளறிதல் | அனைத்தும் |
| **சொல்லாட்சித் திறன்** | | |
| 1. | சொற்களஞ்சியம் பெருக்குதல் | அனைத்தும் |